0_48

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்வி முதுமாணி

இறுதிப் பரீட்சை – 2007

**ESP 2312** – கல்வியின் தத்துவ சமூக அடிப்படை

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 08.07.2007 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) தனிநபர் தொடர்பாகவும் சமூகம் தொடர்பாகவும் கல்வி ஆற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படும் கடமைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

   (ii) 'இலங்கையில் தொழிற் சந்தைத் தேவைகட்கும் கல்வி முறைமையின் வெளியீட்டிற்குமிடையே பொருத்தமின்மையானது ஒரு பிரச்சினையாகும்'. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா? உங்கள் விடைக்கான காரணங்களைத் தருக.

   (iii) தொழிற்படை அணியினரின் தரத்தினை மேம்படுத்துவதில் கல்வியின் வகிபாகத்தினை மனித மூலதனக்கொள்கையைக் கருத்திற்கொண்டு பரிசீலிக்க.

(11 x 3 = 33 புள்ளிகள்)

2. (i) கலாசாரத்திற்கும் சமூகமயமாக்கலிற்குமிடையே உள்ள தொடர்பினைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விபரிக்க.

   (ii) 'குடும்பங்களிடையே காணப்படும் கலாசாரா வேறுபாடுகள், மற்றும் பாடசாலைகளில் சகபாடிகள் கலாசாரம் என்பன பிள்ளைகளின் சமூகமயமாக்கலில் பலமான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன' - இக் கூற்றினை விரித்துரைக்க.

   (iii) இலங்கைப் பாடசாலைகளை விசேடமாகக் கருத்திற்கொண்டு பாடசாலைக் கலாசாரங்களும் பாடசாலை உப கலாசாரங்களும் எவ்வாறு வெவ்வேறு பிள்ளைகளிடத்து வெவ்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன எனப் பகுப்பாய்வு செய்க.

(11 x 3 = 33 புள்ளிகள்)

3. (i) ‘சமூக அடுக்காக்கம்’ , ‘சமூகநகர்வு’ என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துக.

(09 புள்ளிகள்)

(ii) பின்வருவனவற்றைக் கருத்திற்கொண்டு இலங்கையில் சமூக நகர்விற்கான ஒரு கருவியாக கல்வியின் வகிபங்கினை உதாரணங்கள் தந்து விளக்குக.

- கல்வியில் சேர்ந்து கொள்ளல்
- கல்வியில் பங்குபற்றல்
- பரீட்சைகளில் அடைவு
- படித்த இளைஞருக்குத் தொழில் வழங்கல்

(24 புள்ளிகள்)

4. (i) விழுமியங்கள் என்ற எண்ணக்கருவினை வரைவிலக்கணப்படுத்துக.

(06 புள்ளிகள்)

(ii) கல்வியிலிருந்து விழுமியங்களை ஏன் பிரிக்க முடியாதென்பதை விரித்துரைக்க.

(12 புள்ளிகள்)

(iii) பாடசாலைச் சூழலில் மாணவருக்கு விழுமியங்களை ஊட்டுவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதைப் பரிசீலிக்க.

(15 புள்ளிகள்)

5. ‘வாண்மைவிருத்திக்கான கிரமமானதும் ஒழுங்கானதுமான திட்டமிடப்பட்ட சந்தர்ப்பங்களையும் அனுபவங்களையும் உள்ளடக்கிய நீண்டகாலச் செயன்முறையே ஆசிரியர்களது வாண்மைவிருத்தியாகக் கருதப்படுகின்றது’.

(i) ஆசிரியர்களுடைய வாண்மைவிருத்திக்காக அவர்களுக்கு வழங்கக்கூடிய அனுபவங்களின் வகைகளை இனங்கண்டு அவற்றை விளக்குக.

(ii) ஆசிரியர்களது வாண்மைவிருத்தியானது மாணவரது கற்றலில் தாக்கத்தைச் செலுத்துகின்றதா? உங்கள் விடைக்குக் காரணங்கள் தருக.

(iii) ஆசிரியர்களது வாண்மைவிருத்தியானது ஒரு நாட்டில் அமுலாக்கப்படும் கல்வி சீர்திருத்தங்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா? இலங்கையை விசேடமாகக் கருத்திற்கொண்டு உங்கள் விடையை நியாயப்படுத்துக.

(11 x 3 = 33 புள்ளிகள்)

6. (i) இலங்கைப் பாடசாலைகளில் இடைநிலைக் கல்வியில் இன்றைய மூன்று மிக முக்கிய பிரச்சினைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகின்றீர்கள்? நீங்கள் அவற்றை மிக முக்கியமானவையாக ஏன் கருதுகின்றீர்களென்பதை நியாயப்படுத்துக.

(ii) இப்பிரச்சினைகளின் தோற்றத்திற்குப் பங்களிப்புச்செய்த காரணிகளைப் பகுப்பாய்வு செய்க.

(iii) உங்களால் அடையாளங்காணப்பட்ட மேற்குறித்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை ஆராய்க.

(11 x 3 = 33 புள்ளிகள்)

7. பின்வரும் கூற்றுக்களில் எவையேனும் இரண்டு பற்றிக் கருத்துரைக்க.

(1) ‘சந்தர்ப்ப சூழ்நிலைகளிலிருந்து தோன்றும் சவால்களை விளங்கி அவற்றைச் சமாளிப்பதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர்களுக்கு வழங்குவதாக ஆசிரியர் கல்வி விளங்குதல் வேண்டும்’.

(2) ‘கல்வி மீதான முதலீடு, அபிவிருத்தியின் மீதான முதலீடாகும்’.

(3) ‘சர்வதேசமயப்படுத்தல் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வியில் கலப்பு விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. கலப்பு விளைவுகள் என்பது அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் குறிக்கின்றது’.

(4) ‘இலங்கைப் பாடசாலைகளில் கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதில் ‘தகவல் தொழினுட்பவியல்’ பிரதான அங்கமாகக் கருதப்படுகின்றது’ .

(5) ‘ ‘சகலருக்கும் கல்வி’ என்பதை அடைவதில் உள்ள தடைகளைத் தாண்டுவதற்கு திறந்த கற்றலைப் பயன்படுத்தலாம்’.

(16 x 2 + 01 = 33 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)